2021 ஜூன் 24] [திரு. மு.க. ஸ்டாலின்]

கூடங்குளம் அணு உலை, சேலம் எட்டுவழிச் சாலை ஆகிய திட்டங்களுக்கு எதிராக அறவழியில் போராடிய மக்கள்மீது போடப்பட்ட வழக்குகள் அனைத்தும் திரும்பப் பெறப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

ஏற்றத்தாழ்வை இடித்து, சமூகத்தை சமப்படுத்தப் போராடிய தந்தை பெரியார் பெயரால் 240 சமத்துவபுரங்களைக் கட்டினார் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த சமத்துவபுரங்கள் சரியாக பராமரிக்கப்படாத அவல நிலையில் இப்போது இருக்கின்றன; அந்த சமத்துவபுரங்கள் உடனடியாகச் சீரமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல; தமிழகத்தில் மேலும் புதிய சமத்துவபுரங்கள் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையில், திருக்கோயில்களின் புனரமைப்புக்காக 1,000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும் என்ற வாக்குறுதி இருந்தது. அதற்கு முதற்கட்டமாக இந்த நிதியாண்டில் 100 கோடி ரூபாய் செலவில் திருக்கோயில்களைத் தொன்மை மாறாமல் புதுப்பிக்க, (மேசையைத் தட்டும் ஒலி) திருக்குளங்களைச் சீரமைத்திட, திருத்தேர்களைப் புதுப்பித்து திருவிழாக்கள் நடத்திட தேவையான பணிகள் 100 திருக்கோயில்களில் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்களில் பலர், ஆளுநர் உரையைப் பலபடப் பாராட்டிப் போற்றிப் புகழ்ந்தும், ஒரு சிலர்– குறிப்பாக, எதிர்க்கட்சிகளைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் குறைகள் எனச் சிலவற்றைச் சுட்டிக்காட்டியும் பேசியிருக்கிறார்கள். ஆளுநர் உரையில் எதுவுமே இல்லை என்பதைப் போலப் பேசுவது, உண்மையான நிலை என்று ஆகிவிடாது; மக்களும் அப்படிக் கருதிவிட மாட்டார்கள்; அவர்கள் எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, அதிகாரிகளிடையே பேசும்போது முதல் கூட்டத்திலே நான் சொன்னேன். "எனக்குப் புகழுரை வேண்டாம்; உண்மைகளைச் சொல்லுங்கள்" என்று வலியுறுத்தியிருக்கிறேன். அப்படி நான் சொன்னது, ஆக்கபூர்வமான கருத்துகளை எடுத்துரைக்க வேண்டும் என்கிற அந்த நல்லெண்ணத்தில்தான். ஆனால், நிறைகளை ஒதுக்கி